# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
## சாதாரணக் கூட்ட அறிவிப்பு

**28.02.2019–ம் தேதி வியாழன் மாலை 2.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

---

**முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.**

**பொருட்கள்**

**குறள் :**

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

**012.** 2019-ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12-ன் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)-ல் பிரிவு 3,6 மற்றும் 25-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306-ன் படி 2019-ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12-ன் கீழ் பிளாஸ்டிக் மொத்த விற்பனை, உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், விற்பனை, எடுத்துச் செல்லுதல், நெகிழி பயன்படுத்துதல் முதலியன தடை செய்யப்பட்டு அபராத தொகை விதிக்கப்பட்டுள்ளதை கீழ்க்கண்டவாறு உப விதிகள் ஏற்படுத்தலாம்.

1 (i) **செயலாக்க அதிகாரி**: நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர்.

(ii) **ஆய்வு நடத்தும் அதிகாரி**: ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.

(iii) **மேல்முறையீட்டு அலுவலர்**: இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

(iv) **தண்டனைகள் விதிக்கும் முறைகள்**: ஷை சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு உடனடி ஸ்தல அபராதம், குடிநீர் இணைப்பு துண்டித்தல், பொருள்களை பறிமுதல் செய்தல் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமம் ரத்து செய்தல் (D&O) முதலியன தண்டனை முறைகள்

2 (v) வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு :

1. மொத்த சேமிப்பாளர் / விநியோகிப்பாளர்
   a) 1 ச.அடி முதல் 500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
   b) 501 ச.அடி முதல் 1000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
   c) 1001 ச.அடி முதல் 1500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
   d) 1501 ச.அடி முதல் 2000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்

e) 2000-ம் அதற்கு மேல்.

3. வணிக வளாகங்கள்:
   a) பெரிய மற்றும சிறிய துணிக்கடைகள்,
   b) பல்பொருள் அங்காடிகள் பெரியது,
   c) திரையரங்குகள்,
   d) அரசு மதுபானக்கடை, மதுபான விற்பனைக் கூடங்கள் (BARS) மனமகிழ்மன்றம் முதலான இதர இனங்கள்,
   e) கல்வி நிறுவன வளாகங்கள்,
   f) அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வளாகங்கள்,
   g) திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகள் முதலானவை,
   h) பெரிய, நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகள்,
4. மளிகைக் கடைகள், காய்கறிக்கடைகள், பழக்கடைகள், மருந்துக்கடைகள், பழச்சாறு விற்பனைக்கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்,
5. சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோர கடைகாரர்கள் மற்றும் இதர வணிகம் செய்பவர்கள்

6. இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம்

இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார்.

7. துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசு படுத்துவர் அட்டவணை II-ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939 ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

8. மேல் முறையீட்டுக்கு உரிமை

வந்தவாசி நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர். இந்த துணை விதிகள் வந்தவாசி நகர் மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன.

## II தண்டனைகள் விபரம்

பிரிவு 306 **(28-A)** இன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்

| வரிசை எண். | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும பகிர்ந்தளித்தல் | ஐந்தாயிரம் ரூபாய | பத்தாயிரம் ரூபாய் | இருபத்தைந்தாயிரம் ரூபாய் |
| 2. | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | இரண்டாயிரம் ரூபாய | ஐந்தாயிரம் ரூபாய | இருபத்தைந்தாயிரம் ரூபாய் |
| 3. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஓராயிரம் ரூபாய் | இரண்டாயிரம் ரூபாய் | ஐந்தாயிரம் ரூபாய் |
| 4. | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஐநூறு ரூபாய் | ஓராயிரம் ரூபாய் | இரண்டாயிரம் ரூபாய் |

<u>அலுவலக குறிப்பு–</u>

1. மன்றம் முடிவு செய்யலாம்.

013.வந்தவாசி நகராட்சி பகுதிகளில் வாக்களார் மற்றும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தேர்தல் தொடர்பான அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ள அரசு கட்டிடங்களில் சுவர்விளம்பரம் செய்வதற்கும், அதற்கான செலவினத்திற்கும் ரூ.51,500/– மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

1.மன்றம் பதிவு செய்யப்படுகிறது.
2.தேர்தல் தொடர்பான வாக்களார் விழிப்புணர்வு ஏற்படுத்திட செலவினம் ரூ.51,500/– மன்றம் அனுமதி அளித்தல்.

(ந.க.எண்.0112/2019/எச்1)

014.வந்தவாசி நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் TATA ACE NO.TN25 BX 1193 டிப்பர் லாரி பழுது ஏற்பட்டுள்ளதை பொது மக்கள் மற்றும் நிர்வாக நலன் கருதி உடன் பழுது பார்த்த வகையில் முறையே 1600/– மற்றும் 2750/– ஆகமொத்தம் ரூ.4,350/–ஐ திரு.மோகன் என்பவருக்கு வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு–</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.173/2019/எச்1)

015.வந்தவாசி நகராட்சியில் அலுவலகத்திற்கு பயன்படுத்தி வரும் ஈப்பு வாகனம் TN25 U 7978–ன் டைனமோ, மற்றும் ஹரான் பழுதடைந்துள்ளதை நிர்வாகம் நலன்கருதி அவசரம் அவசியம் கருதி உடன் சீர் செய்து கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.20,000/–க்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

1.மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2.அவசரம் அவசியம் கருதி பழுது பார்ப்பதற்கு தோராய செலவினத்திற்கு ரூ.20,000/– மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.2045/2018/எச்1)

016.வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட பொட்டிநாயுடு தெருவில் KRB கார்டன் பொட்டிநாயுடு தெரு விரிவு பகுதியில் கூடுதலாக தெருவிளக்கு அமைக்க தெரு மின்லைன் இணைப்புக்கு கூடுதல் கட்டணம் ரூ.11,455/– தமிழ்நாடு மின்வாரியத்துக்கு செலுத்திட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

1.மன்றம் அனுமதி அளித்தல்.
2.பொது மக்கள் மற்றும் நிர்வாக நலன் கருதி தெருவிளக்கு அமைக்க லைன் கூடுதலாக அமைக்க கட்டணம் 11,455/– செலுத்துவதற்கு மன்றம் ஒப்புதல் வழங்குதல்.

(ந.க.எண். /2018/இ1)

017.வந்தவாசி நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19ல் சுடுகாட்டு பகுதியில் நடைபெற்று கொண்டிருக்கும் (MCC) மக்கும் குப்பை மக்காத குப்பை பிரிக்கும் இடத்தில் மின்கம்பம் நடுவே உள்ளதை மாற்றம் செய்ய தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மின்கம்பம் மாற்றம் செய்ய Demand வரப்பெற்றுள்ளன அதற்கான தொகை ரூ.1350/– தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றம் ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு–</u>

1.மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 122 /2019/இ1)

018.வந்தவாசி நகராட்சி பகுதியில் டெங்கு மற்றும் H,N, நோய் தடுப்பு சிக்கன் குனியா மர்மகாய்ச்சல் பரப்பும் ஆதாரங்களை வேருடன் அழிக்க மற்றும் நோய்கள் தோன்றாத வண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் துரித படுத்த மூன்று மாதங்களுக்கு 04.02.2019 முதல் 30.04.2019 வரை பணியை நீட்டிப்பு செய்து உத்திரவு துணை இயக்குநர் சுகாதார பணிகள் செய்யாறு அவர்களின் செயல்முறை ந.க.எண்.2833/இ4/2013, நாள்.05.02.19 மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணை ந.க.எண்.17197/2016/பாஉ, நாள்.01.02.2019–ன்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வந்தவாசி நகராட்சி நிதி நிலையை கருத்தில் கொண்டு 30 நபர்களை டெங்கு நோய் தடுப்பு தற்காலிக பணிக்கு பணி அமர்த்தி கொள்ளவும் தனியர்களை 04.02.2019 முதல் 30.04.2019 வரை 3 மாதங்களுக்கு பணி அமர்த்திடவும் அதற்கு உண்டான செலவு செய்யாறு சுகாதார மாவட்ட துணை இயக்குநர் கடிதம் ந.க.எண்.2833/இ4/2013, நாள்.21.07.2016ன் படி ரூ.200/– வீதம் ஒரு நாளைக்கு ஒரு பணியாளருக்கு வழங்க கடிதம் வரப்பெற்றுள்ளது. இதன்படி ரூ.6 . 00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு–</u>

1.மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 1530 /2019/எச்1)

019. வந்தவாசி நகராட்சி நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளில் உள்ள மினிபவர் பம்புகளுக்கு புதியதாக 1.5 HP மின்மோட்டார், பம்புகள் மற்றும் கேபிள், உதிரிபாகங்கள் கொள்முதல் செய்தல். பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 15.02.2019 தேதியன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | ஆ.அஜீஸ் | மதிப்பீட்டைவிட 0.14% குறைவு |
| 2. | ஆர்.கோவிந்தன். | மதிப்பீட்டைவிட 8.86 % அதிகம் |

<u>அலுவலககுறிப்பு–</u>

1.மன்றம் முடிவு செய்யலாம்.
2.வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.14 % வரப்பெற்றுள்ள திரு.ஆ.அஜீஸ்,ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க.எண்.1645/2018/இ1)

020.வந்தவாசி நகராட்சியில் குடிநீர் நிதி 2018–19ன் கீழ் தலைமை நீரேற்று நிலையத்தில் புதியதாக 7.50HP மின்மோட்டார், பம்புகள், மின்கேபிள், உதிரிபாகங்கள் கொள்முதல் செய்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 15.02.2019 தேதியன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | ஆர்.கோவிந்தன். | மதிப்பீட்டைவிட 0.21% குறைவு |
| 2. | வி.சுந்தரம் | மதிப்பீட்டைவிட 5.69 % அதிகம் |

<u>அலுவலககுறிப்பு–</u>

1.மன்றம் முடிவு செய்யலாம்.

2.வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.21 % வரப்பெற்றுள்ள திரு.ஆர்.கோவிந்தன்,ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க.எண்.1645/2018/இ1)

021. வந்தவாசி நகராட்சி எச்சூர் குப்பைகிடங்கில் குவிந்துள்ள குப்பைகளை JCB வாகனம் மற்றும் லாரிமூலம் அப்புறப்படுத்துதல் மேலும் குப்பைகளை கொட்டுவதற்கு குப்பை கிடங்கில் இடம் ஏற்படுத்தி தருதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 05.02.2019 தேதியன்று வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் விபரம் | விலைப்புள்ளிகள் விபரம் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.கோவிந்தன்,<br>ஒப்பந்ததாரர் | 1.JCB 1 மணி நேர வாடகை ரூ.<br>2.லாரி 1 (Trip) வாடகை ரூ. | 850.00<br>1000.00 |
| 2. | திரு.வி.சுந்தரம்<br>ஒப்பந்ததாரர் | 1.JCB 1 மணி நேர வாடகை ரூ.<br>2.லாரி 1 (Trip) வாடகை ரூ. | 975.00<br>1100.00 |
| 3. | திரு.P.முருகேசன்,<br>ஒப்பந்ததாரர் | 1.JCB 1 மணி நேர வாடகை ரூ.<br>2.லாரி 1 (Trip) வாடகை ரூ. | 1000.00<br>1200.00 |

<u>அலுவலககுறிப்பு–</u>

1.மன்றம் முடிவு செய்யலாம்.

2.வரப்பெற்றுள்ள மூன்று விலைபுள்ளிகளில் குறைவான தொகைக்கு விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஆர்.கோவிந்தன், ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க.எண்.149/2019/எச்1)

021.A வந்தவாசி நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்திவரும் டிப்பர்லாரி TN25 / T 6143ன் FC காலம் 20.07.2018 உடன் முடிவடைந்து விட்டதால் நிர்வாக நலன் கருதி உடன் மேற்படி வாகனத்தை FC செய்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்குதல்.

<u>அலுவலககுறிப்பு–</u>

1.மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2.பொதுசுகாதார நலன் கருதி உடனடியாக வாகனம் குஊ செய்து கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்குதல்.

(ந.க.எண்.2568/2018/எச்1, நாள்.08.02.2019)

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
வந்தவாசி நகராட்சி